# கொரியா குடியரசுத் தலைமையின் சிறப்பு தூதர் பிரதமர் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்

**ஜூன் 17, 2017**

திரு. டோங்ஷா சுங், கொரிய குடியரசு குடியரசுத் தலைவர் திரு மூன் ஜே-இன் அவர்களின் சிறப்புத் தூதர்,பிரதம மந்திரி நரேந்திர மோடியை இன்று சந்தித்தார்.

இந்தியாவுக்கு தனது சிறப்பு தூதராக திரு. சுங் அவர்களை அனுப்பி வைத்துள்ள ஜனாதிபதி மூனின் சைகைக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு மே மாதம் கொரியா குடியரசிற்கான தனது பயணத்தை தொடர்ந்து இருதரப்பு உறவு ஒரு சிறப்பு விசேட மூலோபாய பங்கிற்கு மேம்படுத்தப்பட்டதனை பிரதம மந்திரி நினைவுகூர்ந்ததுடன், கொரியா குடியரசு இந்தியாவிற்கு ஒரு முக்கிய அபிவிருத்தி பங்காளியாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

வர்த்தக மற்றும் பொருளாதார துறைகளில் இருதரப்பு உறவு ஆழமடைந்து வருவதை வரவேற்பது மட்டுமல்லாமல், பாதுகாப்பு ஒத்துழைப்பு போன்ற புதிய பகுதிகளிலும் ஆழமடைந்து வருவதை பிரதம மந்திரி வரவேற்றார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி மூனுடன் பணியாற்றுவதற்கு அவர் கடமைப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார் மற்றும் ஜனாதிபதி மூன் அவர்களை சந்திப்பதற்கான ஒரு ஆரம்ப வாய்ப்பை எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

**புது டில்லி,**
**ஜுன் 17,2017**